Ravindran Drama Group For Society Through Theatre
ரவீந்திரன் நாடகக் குழு சமுதாயத்திற்கு நாடகம் வழி

---

## ரவீந்திரன் நாடகக் குழுவைப் பற்றி

ரவீந்திரன் நாடகக் குழு, சிங்கப்பூரில் தமிழ் மேடை நாடகக்கலை செழித்தோங்க வேண்டும் என்ற வேட்கைக்கொண்ட சில இளையர்களால் 1988ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ரவீந்திரன் நாடகக் குழு ஆரம்பத்தில் இளையர் நாடகம் மன்றமென பெயர்ப்பெற்றிருந்தது. இக்குழு தொடங்குவதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர்களுள் ஒருவராக திகழ்ந்த திரு ரவீந்திரனின் மரணத்திற்குப் பிறகு, அவரின் நினைவாக, இது ரவீந்திரன் நாடகக் குழுவாக மாறியது.

கடந்த 20 ஆண்டுகளாக பலதரப்பட்ட நாடகங்களை இது மேடையேற்றியுள்ளது. தமிழ் நாடகங்களை வளர்ப்பதே இதன் முக்கிய குறிக்கோளாக இருந்தாலும் அவ்வப்போது ஆங்கில நாடகங்களையும் இது அரங்கமேற்றியுள்ளது. ஃபிரெங்க் கஃப்கா ( Frank Kafka) அவர்களின் ‘ தி டிரையல் ( The Trial)’ எனும் ஆங்கில நாடகம் இக்குழுவின் முதல் ஆங்கில நாடகமாக 1995ஆம் ஆண்டில் ஸப்ஸ்டேஷனில் அரங்கேற்றம் கண்டது. ‘புலம்பல்’ என்ற நாடகம் தமிழிலும் ஆங்கிலத்திலும் மேடையில் பவனி வந்தது.

சிங்கப்பூரில் மட்டுமின்றி மலேசியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் ரவீந்திரன் நாடகக் குழுவின் நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. ரவீந்திரன் நாடகக் குழுவின் மாபெரும் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை ‘பதி வதி…ஒரு காதல்’(1999), ‘ஷெக்ஸ்பியரின் மெக்பெத்…தமிழில்’ (2000, 2001), மற்றும் ‘விலங்குப் பண்ணை’ (2003). 2004ஆம் ஆண்டில் ‘குறளோவியம்’ எனும் படைப்பில் 8 சிறிய நாடகங்களும் ஒரு நாட்டிய நாடகமும் மேடையேறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இளையர்களையும் சிறுவர்களையும் நாடகக்கலையில் ஈடுபடுத்த ரவீந்திரன் நாடகக் குழு பெரும்பங்காற்றி வருகின்றது. 2005இல் ‘அலி பாபா’ எனும் புகழ்பெற்றக் கதை 10 முதல் 13 வயதிற்குட்பட்ட சிறுவர்களைக் கொண்டு நாடகமாக்கப்பட்டது. இதையடுத்து 2006இல் அசுரன் எனும் நாடகமும் எஸ்பிலனேட் அரங்கில் இச்சிறுவர்களைக் கொண்டு மேடையேறி பெரிய வரவேற்பைப் பெற்றது.

தற்போது இக்குழுவில் 50க்கும் மேற்பட்ட குழுவினர் இருக்கின்றனர். இக்குழுவின் கலைஞர்களுள் பலர் தொலைக்காட்சியிலும் பிரபலமாகியுள்ளனர். முழுவதும் பகுதிநேர கலைஞர்களைக் கொண்டிருக்கும் இக்குழு 2008இல் தனது 20ஆம் ஆண்டினைக் கொண்டாடவிருக்கிறது.